*பிரஸார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை - 4*

*28 06 2026 SUNDAY 6 30 PM*

*வணக்கம்-மாநிலச்செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1) பாதுகாப்பு துறையில் இந்தியா சுயசார்பினை அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) ஜவுளித் துறையின் வளர்ச்சியில் தமிழகம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தமிழகத்தில் பதிவு பெறாமல் சீட்டு நிதியம் நடத்தினால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அரசு எச்சரித்துள்ளது.

4) தமிழக அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி நியமனத்தை, முதலமைச்சர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

5) British - Irish பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 3 தங்கம், 7 வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

பாதுகாப்பு துறையில் இந்தியா சுயசார்பினை அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் பிரதமர் (1) 28 செகண்ட்ஸ்)

மேற்காசியாவில் நிலவும் சூழலை மக்கள் பங்களிப்போடு, வெற்றிகரமாக எதிர்கொண்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோல், டீசல் சேமிப்பு மற்றும் இயற்கை உரங்கள் பயன்பாடு குறித்து தாம் விடுத்த வேண்டுகோளை செயல்படுத்தி, அதுதொடர்பான தகவல்களை மக்கள் தம்மிடம் பகிர்ந்து வருவதாகவும் பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் பிரதமர் (2) 44 செகண்ட்ஸ்)

மழை நீர் சேமிப்பு இயக்கம் தொய்வின்றி தொடர வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

(சவுண்ட் பைட் பிரதமர் (3) 23 செகண்ட்ஸ்)

மக்கள் தான் நாட்டின் மிகப் பெரிய சக்தி என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் பிரதமர் (4) 44 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு 8 மணிக்கு மறுஒலிபரப்ப செய்யப்படுகிறது.

மாநிலத்தின் அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

ஜவுளித் துறையின் வளர்ச்சியில் தமிழகம் முக்கியப் பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

இன்று திருப்பூரில் பின்னலாடை உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

இயற்கையாகவே ஆடை உற்பத்திக்கான சிறப்பான சூழலை திருப்பூர் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜவுளி ஏற்றுமதிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பருத்தி ஏற்றுமதி மீதான வரி குறைக்கப்பட்டிருப்பது, ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

விருதுநகரில் ஜவுளிப்பூங்கா அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் 43 ஆயிரத்து 51 மையங்களில், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இப்பணியில் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் விடுபட்டவர்களுக்கு நாளையும், நாளை மறுநாளும் தற்காலிக முகாம்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

>>>>><<<<<

ஏழை மக்களுக்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் த.வெ.க. அரசு செயல்படுத்தும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மந்தை புறம்போக்கு உள்ளிட்ட பல்வேறு வகை நிலங்களில் வசித்துவரும்

*மக்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் கூறினார்.*

*>>>>><<<<<*

*நெல் கொள்முதலின் போது முறைகேடுகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கட ரமணன் எச்சரித்துள்ளார்.*

*திருவாரூரில் இன்று செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*இந்த மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை சேமிப்பு கிடங்குகளுக்கு கொண்டு செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.*

*கொள்முதல் செய்யப்படும் நெல் மழையில் நனையாமல் பாதுகாக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. வெங்கட ரமணன் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் பதிவு பெறாமல் சீட்டு நிதியம் நடத்தினால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.*

*நாமக்கல்லில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதுபோன்ற நிறுவனங்களில் முதலீடு செய்வதால் ஏற்படும் பாதிப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது என்றும் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*பொதுஇடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியது போல் காணொலி வெளியிட்ட மாநில அமைச்சர் திரு. சரத்குமாரை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.*

*இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுகுறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் 125 நாட்கள் வேலை உறுதி திட்டம் செயல்படத்தப்படுமா என்பது குறித்து த.வெ.க. அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டத்தை செயல்படுத்துவதில்லை என்று முடிவு செய்தால், தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், 150 நாட்கள் வேலை வழங்குவதற்கான மாற்று திட்டம் என்ன என்பதையும் த.வெ.க. அரசு தெரிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.*

*>>>>><<<<<*

தமிழக அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி நியமனத்தை, முதலமைச்சர் திரு. விஜய் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெங்களூருவைச் சேர்ந்த வெங்கட நாராயணாவின் இந்த நியமனம் கடுமையான விமர்சனத்தை உருவாக்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் சமூக அரசியல் பொருளாதார சூழல் குறித்து போதிய புரிதல் இல்லாத ஒருவர் தில்லி சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கப்படுவதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் திரு. வீரபாண்டியன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 6 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கோவை, நீலகிரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தொடர் விடுமுறையை முன்னிட்டு உதகை படகு இல்லத்தில் சுற்றுலாப் பயணிகள் இன்று குவிந்துள்ளனர்.

>>>>><<<<<

திருநெல்வேலியில் உள்ள அருள்மிகு நெல்லையப்பர் - காந்திமதி அம்பாள் திருக்கோவில் ஆனிப் பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர்.

>>>>><<<<<

விழுப்புரம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர், 2 பேர் காயமடைந்தனர்.

>>>>><<<<<

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே போதைப்பொருள் விற்பனை செய்த 6 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

British - Irish பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 3 தங்கம், 7 வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஒற்றையர் பிரிவுகளில் Pramod Bhagat, Nithyashri Sumathi Sivan, துளசிமதி முருகேசன் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

இதேபோல் இப்பிரிவுகளில் Nitesh Kumar, Naveen Sivakumar, மனிஷா ராம்தாஸ் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

*இரட்டையர் பிரிவுகளில் இந்தியாவிற்கு 4 வெள்ளிப்பதக்கங்கள் கிடைத்தன.*

*>>>>><<<<<*

*ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில், இந்தியா 2-1 என்ற புள்ளிக்கணக்கில் சீன தைபே-ஐ வென்றது.*

*ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் லீக் ஆட்டங்கள் அனைத்திலும் வெற்றிபெற்றதன் மூலம், இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*புல்லட் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Nihal Sarin பட்டம் வென்றார்.*

*இணையம் வாயிலாக நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அவர், பிரான்ஸின் Alireza Firouzia-வை வென்றார்.*

***>>>>>END<<<<<***